பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 02 2025 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி ஃபிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

2. பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பங்கேற்கிறார்.

3. மகாராஷ்டிராவின் விதர்பா பகுதியில் பெருமளவிலான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

4. திருப்பதி லட்டு கலப்படம் தொடர்பாக சிபிஐ சிறப்பு புலனாய்வு குழு நான்கு பேரைக் கைது செய்துள்ளது.

5. ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் பெங்களூரு அணி, ஜம்ஷெட்பூர் அணியை வென்றது

--- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஃபிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

தமது பயணத்தின் முதற்கட்டமாக ஃபிரான்ஸ் தலைநகர் பாரீஸ் செல்லும் பிரதமர், அங்கு நடைபெறும் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரனுடன் கூட்டாக தலைமை ஏற்கிறார்.

இன்றிரவு ஃபிரான்ஸ் அதிபர் அளிக்கும் விருந்து நிகழ்ச்சியிலும் பிரதமர் பங்கேற்கவுள்ளார்.

நாளை அதிபர் இம்மானுவேல் மேக்ரன் மற்றும் தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளையும் பிரதமர் சந்தித்துப் பேச உள்ளார்.

தமது பயணத்தின் இரண்டாம் கட்டமாக அமெரிக்கா செல்லும் பிரதமர், அந்நாட்டின் அதிபராக இரண்டாவது முறையாக பொறுப்பேற்றுள்ள திரு. ட்ரம்ப்புடன் முக்கியப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலத்தின் விதர்பா பகுதியில் பெரிய அளவிலான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

‘முன்னேறும் விதர்பா 2025’ என்ற மாநாட்டின் நிறைவு விழாவில் பேசிய அவர், ஐஐடி, ஐஐஎம் போன்ற உயர்கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இப்பகுதியில் புதிய தொழில் நிறுவனங்கள் தொடங்கப்படும் என்றார்.

குறிப்பாக பருத்தி, பருப்பு வகை, மஞ்சள் மற்றும் மக்னா சார்ந்த தொழில்கள் தொடங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஏற்றுமதி அடிப்படையிலான சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

ஏரோ இந்தியா விமான கண்காட்சியை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பெங்களூருவில் இன்று தொடங்கி வைக்கிறார்.

ஐந்து நாட்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் 80க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 150 நிறுவனங்கள் உட்பட தொள்ளாயிரம் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சி குறித்து பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய திரு. ராஜ்நாத் சிங், ஏரோ இந்தியா விமான கண்காட்சி வலிமையான மற்றும் சுயசார்பு இந்தியாவை உருவாக்குவது என்ற அரசின் தொலைநோக்கு பார்வையை முன்னெடுத்துச் செல்வதாக அமையும் என்றார்.

மேலும் இளைஞர்களுக்கு ஊக்கமளிப்பதுடன் அறிவியல் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இது நாட்டின் எதிர்காலத்தை திட்டமிடுவதற்கும் பயனுள்ளதாக அமையும் என்று குறிப்பிட்ட பாதுகாப்புத்துறை அமைச்சர், நமது ராணுவ திறமைகளை வெளிப்படுத்துவதோடு உலகளாவிய ஒத்துழைப்புகளை மேற்கொள்ளவும் வழிவகுக்கும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>

திருப்பதி அருள்மிகு ஏழுமலையான் கோவில் லட்டு பிரசாதத்தில் கலப்படம் செய்யப்பட்டதாக எழுந்த புகார் குறித்து விசாரித்து வரும் சிபிஐ தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழு நான்கு பேரைக் கைது செய்துள்ளது.

லட்டு தயாரிப்பதற்கான நெய்யில் கலப்படம் செய்ததாக எழுந்த இந்தப் புகாரின்பேரில் தமிழகத்தைச் சேர்ந்த தனியார் பால் நிறுவனத்தின் ராஜு ராஜசேகரன், பூனம்பாக்கம் வைஷ்ணவி பால் நிறுவனத்தின் அபூர்வா வினய்காந்த், ரவுர்கேலாவை சேர்ந்த பால் நிறுவனத்தின் பிபின் ஜெயின் மற்றும் பொமில் ஜெயின் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பொதுத்தேர்வுகளை மாணவர்கள் அச்சமின்றி எதிர்கொள்ளும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் கலந்துரையாடும் நிகழ்ச்சி இன்று காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் தவறாமல் பங்கேற்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆகாஷ்வாணி, தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூ-டியூப் அலைவரிசை, ஸ்வயம் மற்றும் ஸ்வயம் பிரபா இணையதளங்களிலும், கல்வி மற்றும் தகவல் ஒலிபரப்பு அமைச்சகங்களின் அனைத்து சமூக ஊடகங்களிலும் இந்த கலந்துரையாடல் ஒலிபரப்பாக உள்ளது.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று கலந்துகொண்டு திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுகிறார்.

அங்குள்ள ஹனுமன் கோவிலிலும் அவர் வழிபாடு நடத்த உள்ளார்.

மேலும் கும்பமேளா குறித்த தகவல்களை நவீன தொழில்நுட்பத்தில் வழங்கும் டிஜிட்டல் மையத்தையும் குடியரசுத்தலைவர் பார்வையிட உள்ளார்.

இதனிடையே கும்பமேளாவை ஒட்டி பிரயாக்ராஜில் அமைக்கப்பட்டுள்ள கைவினைப் பொருட்கள் கண்காட்சி மற்றும் விற்பனை மையம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த கைவினை கலைஞர்கள் இதில் பங்கேற்று நூற்றுக்கும் மேற்பட்ட அரங்குகளில் தங்களது உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு வைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சென்னையைச் சேர்ந்த திருமதி கீதா கோபி வைத்துள்ள தங்க இழைகளாலான தஞ்சாவூர் ஓவியம் பார்வையாளர்களை கவர்ந்துள்ளது.

<<<<>>>>

இந்தியா – எகிப்து இடையிலான கூட்டு ராணுவப் பயிற்சி ராஜஸ்தானில் உள்ள மகாஜன் துப்பாக்கி சுடும் தளத்தில் இன்று தொடங்குகிறது.

இம்மாதம் 23ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த போர்ப் பயிற்சிக்கு சைக்ளோன் 2025 என பெயரிடப்பட்டுள்ளது.

இந்தியா – எகிப்து இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேலும் அதிகரிப்பதோடு, பாலைவனப் பகுதியில் ராணுவத்தின் தொழில் திறன் மற்றும் போர்ப் பயிற்சி முறைகளை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள நோக்கில் இந்தப் பயிற்சி நடைபெற உள்ளது.

<<<<>>>>

இலங்கையில் ஏற்பட்ட திடீர் மின்வெட்டு காரணமாக அந்நாட்டின் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கின.

அந்நாட்டின் **Panadura** பகுதியில் உள்ள மின் தொகுப்பு மையத்தில் குரங்குகள் புகுந்ததால் மின் வினியோகம் தடைபட்டதாக அந்நாட்டின் மின்துறை அமைச்சர் திரு. குமார ஜெயக்கொடி கூறியுள்ளார்.

இதன் காரணமாக குடிநீர் வினியோகம் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

மின் தொகுப்பு மையத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணியில் ஊழியர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

<<<<>>>>

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருவதாக பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

தருமபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுபோன்ற குற்றங்களைத் தடுக்க மாநில அரசு கடுமையான சட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்றார்.

அரசு ஊழியர்களுக்கான பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திய அவர், சாதிவாரி கணக்கெடுப்பை மாநில அரசே மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தருமபுரி - மொரப்பூர் ரயில்பாதை திட்டத்திற்கு தேவையான நிலத்தை கையகப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. அன்புமணி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் வகையில் ஆலோசனைக் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தலைமையிலான இக்குழுவில் பிரபல குத்துச்சண்டை வீராங்கனை மேரிகோம், டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ், பேட்மிட்டன் வீராங்கனை சாய்னா நேவால் உள்ளிட்ட 17 பேர் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி தோல்வியடைந்ததை அடுத்து முதலமைச்சர் திருமதி அதிஷி தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதற்கான கடிதத்தை அவர் தில்லி துணைநிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனாவிடம் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அதிஷி, ஆம் ஆத்மி கட்சி தில்லி சட்டப்பேரவையில் ஆக்கப்பூர்வ எதிர்க்கட்சியாக செயல்படும் என்று தெரிவித்தார்.

புதிதாக ஆட்சியமைக்க உள்ள பிஜேபி மகளிருக்கான 2 ஆயிரத்து 500 ரூபாய் உதவித்தொகை உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில் அந்த அணி 3-0 என்ற கோல் கணக்கில் ஜம்ஷெட்பூர் அணியை வென்றது.

இன்றைய ஆட்டத்தில் ஒடிசா அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

-----------

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கட்டாக்கில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டாஸ் வென்று முதலில் பேட்செய்த இங்கிலாந்து 304 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

305 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா, 44 புள்ளி 3 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 308 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

ரோஹித் ஷர்மா அதிரடியாக விளையாடி 119 ரன் குவித்தார்.

3 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை 2-1 என்ற ஆட்டக் கணக்கில் இந்தியா கைப்பற்றியது.

**<<<<The End>>>>**